**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சோழிங்கநல்லூர்.**

முன்னிலை: திரு. ராஜநந்திவர்மசிவா, B.E., M.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்
சோழிங்கநல்லூர்
2026 ம் வருடம் ஜூலை திங்கள் 09 ம் நாள் வியாழக்கிழமை

**C.C. No.200/2024**
**CNR.No.TNCG08-001980-2024**

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,
கண்ணகிநகர் காவல் நிலையம்
குற்ற எண்.286/2022,
U/s.294(b), 324, 506(ii) IPC

.... குற்றமுறையிடுபவர்.

// எதிராக //

யுவராஜ், வ/27, த/பெ. பார்த்திபன்
முகவரி:-
எண். 18, காந்தி தெரு, சோழிங்கநல்லூர், சென்னை – 119.

.... எதிரி.

| | | |
|---|---|---|
| 1. | வரிசை எண். | சிசி. எண்.200/2024. |
| 2. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | கண்ணகிநகர் காவல் நிலையம் குற்ற எண்.286/2022 |
| 3. | குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயர், வயது மற்றும் தந்தை பெயர் மற்றும் முகவரி | யுவராஜ், வ/27, த/பெ. பார்த்திபன்<br>முகவரி:-<br>எண். 18, காந்தி தெரு, சோழிங்கநல்லூர், சென்னை – 119. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 21.07.2022 |
| 5. | முறையீடு தேதி | 22.07.2022 |
| 6. | குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்த நாள் | 22.07.2022 |
| 7. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | --- |

| | | |
|---|---|---|
| | சரணடைந்த தேதி | |
| 8. | ஒப்படைத்தல்/அனுப்பி வைத்தல் தேதி (Commitment) | --- |
| 9. | விசாரணை துவக்கம் தேதி | 28.10.2022 |
| 10. | விசாரணை முடிவு தேதி | 09.07.2026 |
| 11. | தண்டனை அல்லது உத்தரவு | அரசு தரப்பில் இறுதி முடிவாக, இவ்வழக்கின் எதிரியின் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவு 294(b), 324, 506(ii)–ன் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்தில் கைப்பற்றப்பட்ட P.I.No.96/2026 ச.பொ.1 குழவி கல்–1, ஒரு அடி கட்டை–1 ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி பிணையில் செல்வதற்காக பிணையதாரர்களால் எழுதி கொடுக்கப்பட்ட பிணைப் பத்திரங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |
| 12. | தேதி தீர்ப்பு நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான காண்முடிவு/முடிவு | -- |
| 13. | காலதாமதத்திற்கான விளக்கம் | -- |

இவ்வழக்கானது கடந்த 28.10.2022 ம் தேதி நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர், சோழிங்கநல்லூர் அவர்களும், எதிரிக்காக திரு. S. சரவணபெருமாள் மற்றும் K. சத்யா, வழக்கறிஞர் அவர்களும் முன்னிலையாகி நடைபெற்று வந்து, இறுதியாக இன்று 09.07.2026 ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று நடைபெற்ற இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று 09.07.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**

1. சாட்சி–1 வள்ளிக்கு எதிரி யுவராஜ் கணவர் ஆவார். எதிரி யுவராஜ் தினமும் குடித்துவிட்டு சாட்சி–1 வள்ளியிடம் சண்டை போட்டுவந்துள்ளார். அதே போல் கடந்த 21.07.2022 ம் தேதி காலை வேலைக்கு சென்ற எதிரி யுவராஜ் வேலை முடித்து இரவு 07.30 மணிக்கு வீட்டிற்கு வந்து வீட்டிலேயே எதிரி யுவராஜ் மது அருந்தியுள்ளார். சாட்சி–1 வள்ளியின் அம்மா சாட்சி–2 ஏகவள்ளி அந்த பாட்டிலையும் அவர் சாப்பிட்ட இலையையும் தூக்கிபோட போயுள்ளார். அதற்கு சாட்சி–1 வள்ளி அவரது அம்மா சாட்சி–2 ஏகவள்ளியையும் எதிரி யுவராஜையும் திட்டியுள்ளார். அதனால் கோபமான எதிரி யுவராஜ் அருகில் இருந்த அம்மி குழவி கல்லை எடுத்து சாட்சி–1 வள்ளியை பார்த்து ஒத்தா தெவிடியா உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று அவரது முகத்தில் அடித்து பிறகு கட்டையால் அடித்து காயத்தை ஏற்படுத்திய குற்றத்தை புரிந்துள்ளார். எனவே மேற்சொன்ன குற்றத்திற்காக எதிரியின் மீது பிரிவு 294(b), 324,

506(ii) IPC ன் கீழ் தண்டிக்க தக்க குற்றம் புரிந்துள்ளதாக கண்ணகிநகர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது குற்றம் சுமத்தி குவிமுச பிரிவு 173(2)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கானது கடந்த 28.10.2022 ம் தேதி நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 190(1)(b)–ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு குவிமுச பிரிவு 204 ன் கீழ் அழைப்பாணை சார்வாக உத்தரவிடப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானபோது அரசு தரப்பு வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

4) பின்னர் போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து வினவியபோது எதிரி அக்குற்றங்களை மறுத்தார். எனவே, இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில், எதிரி இவ்வழக்கின் படியான குற்றத்தை புரிந்துள்ளார் என்பதை அனுமானிக்க போதிய அடிப்படை ஆதாரங்கள் இருந்ததால் எதிரி மீது 294(b), 324, 506(ii) IPC–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து வாசித்து விளக்கி கூறி வினவியபோதும் எதிரி அக்குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எனவே, இவ்வழக்கு அரசு தரப்பின் சாட்சிய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

6) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்</u> :–

6.1. கடந்த 22.07.2022 அன்று 2.00 மணி அளவில் அசா–1 நிலையம் ஆஜர் ஆகி கொடுக்கப்பட்ட அதசாஆ 2 ஆன புகாரை பெற்று காவல் நிலைப குற்ற எண்.286/2022 குற்றப்பிரிவு 294(b), 324, 506(ii) IPC என் கீழ் வழக்கு பதிவு செய்து அதசாஆ 3 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவம் சென்று சாட்சிகள் பெரியசாமி மற்றும் சின்னதுரை முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அதசாஆ 4 மற்றும் 5 ஆன மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். இந்த வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 22.07.2022 அன்று காலை 10.00 மணியளவில் கண்ணகி நகர் ஆர்ச் அருகே அருகே கைதுக்கான காரணம் கூறி கைது செய்துள்ளார். அப்பொழுது முதலாவது எதிரி கிஷோர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சீனிவாசன் மற்றும் இளங்கோ முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளிடமிருந்து வழக்கில் பயன்படுத்தப்பட்ட குலவிக்கல் ஒன்று மற்றும் ஒரு அடி கட்டை ஒன்று பறிமுதல் செய்துள்ளார். அதே சாட்சிகள் முன்னிலையில் வழக்கின் சொத்தை கைப்பற்றி அதசாஆ 6 ஆன கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் அவரது விசாரணையை முடித்து எதிரிகளின் மீது குற்றப்பிரிவு 294(b), 324, 506 (ii) IPCன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6.2. மேற்குறிப்பிட்ட சாட்சிய விபரங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்த சாட்சியங்களின் கூறுகளை குறித்து கேள்விகளாக குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது, எதிரி அந்த சாட்சிய கூறுகளை

மறுத்தார். தங்களது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறி தங்களது தரப்பை முடித்துக் கொண்டனர்.

6.3. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால், அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களிலிருந்து எதிரி சாட்சி–1 ஐ ஆபாசமாக பேசியும், குழவி கல்லால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தாரா என்று அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பதேயாகும்.

7) அரசு தரப்பு வழக்கறிஞரின் வாதுரை மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞரின் வாதுரை, சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கு தீர்மானிக்கப்படுகிறது.

8) <u>அரசு தரப்பு வாதுரை</u> :–

8.1. அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபணம் செய்ய போதுமான வகையில் சாட்சியம் அளித்துள்ளதால், அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி மீதான குற்றத்தை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதால் எதிரிக்கு பிரிவு 294(b), 324, 506(ii) IPC-ன் கீழ் தகுந்த தண்டனை வழங்கும்படியும் வாதிட்டார்.

9) <u>எதிரி தரப்பு வாதுரை</u> :–

9.1. எதிரிக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பு எதிரி மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம்

நிரூபணம் செய்யவில்லை. எனவே, எதிரி இதச பிரிவு 294(b), 324, 506(ii)–ன் கீழ் குற்றவாளி அல்ல என்றும் எதிரியை விடுதலை செய்து உத்தரவிடுமாறு கோரி வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

9.2. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மிகுந்த கவனத்துடன் ஆராயப்பட்டன. அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த குற்றத்துறை வழக்கறிஞர் அவர்களின் இறுதி வாதமும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞரின் வாதமும் மிகுந்த கவனத்துடன் கருத்தில் கொள்ளப்பட்டன.

9.3. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களிலிருந்தும் இரு தரப்பு வாதங்களில் இருந்தும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில் இருந்தும் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவு 294(b), 324, 506(ii) IPC-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

**10) <u>தீர்வு</u> :-**

10.1. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை குறித்து பரிசீலனை செய்கையில், இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 வள்ளி தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார், சுமார் இரண்டு, மூன்று வருடத்திற்கு முன்பு தேதி, மாதம், வருடம் ஞாபகம்இல்லை நான் கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது நான் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பொழுது

காவல் ஆய்வாளர் என்னிடம் கையொப்பம் வாங்கினார், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தன்னை ஆபாசமாக பேசி குழவி கல்லால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். எதிரி சாட்சி–1ஐ ஆபாசமாக பேசி குழவி கல்லால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார் என்று அரசு தரப்பில் நிரூபிக்காததால் அரசு தரப்பு அ.சா.1 சாட்சியத்தின் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10.2. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை குறித்து பரிசீலனை செய்கையில், இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 பெரியசாமி தனது சாட்சியத்தில், என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல, சுமார் இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்பு வெரிஃபிகேஷன் சம்பந்தமாக என்னிடம் கையொப்பம் வாங்கினர் அது தவிர போலீசார் என்னை விசாரிக்கவில்லை எந்த கையெழுத்தும் நான் போடவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். எதிரி சாட்சி–1ஐ ஆபாசமாக பேசி குழவி கல்லால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார் என்று அரசு தரப்பில் நிரூபிக்காததால் அரசு தரப்பு அ.சா.2 சாட்சியத்தின் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10.3. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை குறித்து பரிசீலனை செய்கையில், இவ்வழக்கு சம்பவதில் பாதிக்கப்பட்ட சாட்சியான அசா–1 ஐ சார்ந்த சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3 ஏகவள்ளி தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி எனது மருமகன், புகார்தாரர் வள்ளி எனது மகள், இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். எதிரி சாட்சி–1 ஐ ஆபாசமாக பேசி குழவி கல்லால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார் என்று அரசு தரப்பில் நிரூபிக்காததால் அரசு தரப்பு அ.சா.3 சாட்சியத்தின் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10.4. அ.சா.4 திரு. சேகர் காவல் உதவி ஆய்வாளர் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் திரு. ஆனந்தகுமார் அவர்கள் நிகழ்நிலை புகார்தாரர் கொடுத்த அதசாஆ 2 ஆன புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து காவல் நிலைய குற்ற எண்.286/2022, இதச பிரிவு 294(b), 324, 506(ii)-ன் கீழ் அதசாஆ 3 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிய சான்றாவணங்களை முன்னிறுத்தியுள்ளதை குறித்தும் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு. ஆனந்தகுமார் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் சாட்சியாக முன்னிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்படாததும் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) இவ்வழக்கில் பிரதான சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கினை ஆதரிக்காமல் பிறழ்

சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்கண்ட அரசு தரப்பு சாட்சி ஒத்துரைக்கப்படாத அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிராக இவ்வழக்கினை தீர்மானிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. அ.சா.4 ஐ தவிர்த்து மற்ற அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிராகவோ அல்லது இறுதி அறிக்கையில் கண்டவாறு குற்றச் சம்பவம் நடந்தது என்றோ சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த பார்வை மகஜர் சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே, அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுவிட்டது என்ற முடிவுக்கு வர முடியாது. எனவே, அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரி மீதான இதச பிரிவு 294(b), 324, 506(ii)-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சந்தேகத்தின் பலனை பெற தகுதியுடையவர் ஆகிறார் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

12) எனவே, மேலே விளக்கப்பட்ட விபரங்களை கருத்தில் கொண்டு பரிசீலனை செய்கையில், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டு போதிய சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபணம் செய்ய தவறியுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவு 294(b), 324, 506(ii)–ன் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து**

**இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இவ்வழக்கில் வழக்குச் சொத்தில் கைப்பற்றப்பட்ட P.I.No.96/2026 ச.பொ.1 குழவி கல்–1, ஒரு அடி கட்டை–1 ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி பிணையில் செல்வதற்காக பிணையதாரர்களால் எழுதி கொடுக்கப்பட்ட பிணைப் பத்திரங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 09.07.2026 ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**Sd/– M.N. ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**

**1) <u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

1. அ.சா.1 திரு. வள்ளி.
2. அ.சா.2 திரு. பெரியசாமி.
3. அ.சா.3 திரு. ஏகவள்ளி.
3. அ.சா.4 திரு. சேகர் (காவல் உதவி ஆய்வாளர்).

**2) <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

1. அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள அசா–1 ன் கையொப்பம்.
2. அ.சா.ஆ.2 புகார் மனு.
3. அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை.
4. அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம்.

5. அ.சா.ஆ.5 பார்வை மகஜர்.

6. அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகஜர்.

7. அ.சா.ஆ.7 படிவம் 91.

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றுப் பொருள் | - | 1. குழவி கல்–1 |
| | | 2. ஒரு அடி கட்டை–1 |
| எதிரிகள் தரப்பு சாட்சி | - | இல்லை. |
| எதிரிகள் தரப்பு சான்றாவணம் | - | இல்லை. |
| எதிரிகள் தரப்பு சான்றுப் பொருள் | - | இல்லை |

**Sd/– M.N. ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**